**வாக்குமூலம்**

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்**

**வழக்கு எண் : STC 88 of 2023**

**வழக்கு சாட்சி – DW 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ஆர்.ஆர்.பாபு | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | ராமசாமி | தொழில் | : | Production Manager |
| கிராமம் | : | ராக்கியாபாளையம் | சமயம் | : | |
| தாலுக்கா | : | அவிநாசி | வயது | : | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 29.08.2024.

(புகார்தாரர் ஆஜர்).

**முதல் விசாரணை:** **நாள்: 29.08.2024**

1. புகார்தாரரை எனக்கு யார் என்றே தெரியாது. இந்த வழக்கிற்கு வந்த பிறகு தான் எனக்கு புகார்தாரரை தெரியும். 2000 ஆம் ஆண்டிலிருந்து ராம்குமார் பேஷன் என்ற நிறுவனத்தின் நானும், எனது அண்ணன் ஆர்.ஆர்.மணி என்பவரும் சேர்ந்து 2018 ஆம் ஆண்டு வரை நடத்தி வந்தோம். 2018 ஆம் ஆண்டுவரை உற்பத்தி பிரிவில் நான் வேலை செய்து வந்தேன். எனக்கு நிறுவனத்தில் உள்ள வரவு செலவு எதுவும் தெரியாது. 2019 ல் எனது அண்ணன் மகன்கள் நிறுவனத்தின் நிர்வாகத்தில் வந்ததால் நான் நிறுவனத்தை விட்டு வெளியேறிவிட்டேன். Aarow Knit Garments என்ற தனியார் நிறுவனத்தில் உற்பத்தில் பிரிவில் வேலை பார்த்து சம்பாதித்து வருகிறேன். நான் புகார்தாரருடன் எந்தவொரு சமயத்திலும் தொலைபேசிலோ, நேரிலோ, அலுவலகத்தில் வைத்தோ பார்த்ததும் இல்லை, பேசியதும் இல்லை.

2. 22.11.2022 ஆம் தேதியன்று இந்த வழக்கின் புகார்தாரர் எனக்கும், எனது அண்ணனுக்கும் அறிவிப்பு அனுப்பி இருந்தார். 14.12.2022 ஆம் தேதி நானும், எனது அண்ணனும் அந்த அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு செய்தோம். அதற்கு எந்த பதிலும் புகார்தாரர் செய்யவில்லை. இது சம்மந்தமாக எனது அண்ணனிடம் விசாரித்தபோது புகார்தாரரை யார் என்று தெரியாது என்றும், புகார்தாரர் தாக்கல் செய்துள்ள Letter Pad, காசோலை, அதில் உள்ள கையொப்பம் ஆகியவை எதுவும் நம்முடையது இல்லை.

அனைத்தும் போலியானவையாக உள்ளது. ஒரு மாதம் அவர் மனஉலைச்சலில் இருந்தார்.நான் பதில் அறிவிப்பு செய்த 14.12.2022 ஆம் தேதியிலிருந்து 3 நாட்களில் மாரடைப்பு ஏற்பட்டு எனது அண்ணன் இறந்துவிட்டார். அவர் இறப்பதற்கு முன்பு புகார்தாரரும், அவருடன் சேர்ந்த சாட்சிகள் நாராயணசாமி, ரவிச்சந்திரன் ஆகியோர்கள் பொய்யான வழக்கு தாக்கல் செய்து மிகுந்த மன உலைச்சலுக்கு உட்படுத்துவதாக என்னிடம் அடிக்கடி சொல்லிவந்தார்.

3. முதலில் எனது அண்ணன் பணம் வாங்கியதாக இருந்தது. எனது அண்ணன் இறந்த பிறகு நான் பணம் வாங்கியதாக மாற்றி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். நான் பணம் வாங்கியதாக சொல்லப்படும் 23.08.2022 ஆம் தேதியன்றும், நாங்கள் வழக்கு காசோலை கொடுத்ததாக சொல்லப்படும் 06.10.2022 ஆம் தேதியன்றும் நானும், எனது அண்ணனும் எங்களது நிறுவனத்தில் வேலை செய்து கொண்டிருந்தற்கான ஆவணங்களை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். அந்த ஆவணங்கள் நிறுவனத்தில் இருப்பதால் அதற்கு தனியாக மனுதாக்கல் செய்து தருவிக்கிறேன். பொய்யாக புகார் கொடுத்துள்ள புகார்தாரர் மீது நடவடிக்கை எடுத்து அவருக்கு தக்க தண்டனை கொடுத்து என்னை இந்த வழக்கிலிருந்து விடுவிக்க கேட்டுக்கொள்கிறேன்.

**<u>புகார்தாரர் தரப்பு குறுக்குவிசாரணை :</u>**

4. நானும், எனது அண்ணன் ஆர்.ஆர்.மணி இருவரும் பங்குதாரர் என்று சொல்வதற்கு அதற்கான ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வங்கியில் உள்ளது. வங்கியிலிருந்து தாக்கல் செய்கிறேன். 2019 ஆம் ஆண்டில் நான் நிறுவனத்திலிருந்து வெளியேறிதற்கு வங்கியில் பங்குதாரரிலிருந்து வெளியேறியதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கிலிருந்து தப்பிக்க வேண்டி 2019 ஆம் ஆண்டில் நிறுவனத்திலிருந்து வெளியேறியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. . Aarow Knit Garments என்ற தனியார் நிறுவனத்தில் உற்பத்தில் பிரிவில் வேலை செய்வதை காண்பிப்பதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாக்கல் செய்ய போய்கிறேன்.

5. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ம.சா.ஆ.1 ல் உள்ள Letter Pad எங்கள் நிறுவனத்துடையதா என்றால் சரிதான். அதில் உள்ள சங்கதிகள் எங்களுடையது இல்லை. எங்கள் நிறுவனத்துடையது தான். அதில் உள்ள முத்திரை, கையொப்பம் யாருடையது என்றால் அதில் உள்ள முத்திரை எங்களுடையது. கையொப்பம் எங்களுடையது இல்லை. உண்மையில் அதில் உள்ள கையொப்பம் எங்களுடையது என்றால் சரியல்ல. நான் வழக்கிலிருந்து தப்பிக்க வேண்டி கையொப்பம் என்னுடையது இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு காசோலை எங்களது நிறுவனத்தை சார்ந்ததா என்றால் சரிதான். காசோலையில் பூர்த்தி செய்யப்பட்ட விபரங்களும், கையொப்பமும் யாருடையது என்றால் எங்களுடையது இல்லை. உண்மையில் வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றாலும், அதை நான் தான் பூர்த்தி செய்தேன் என்றாலும், தற்போது வழக்கிலிருந்து தப்பிக்கவேண்டி மேற்படி சங்கதிகளை இல்லை என்று மறுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. தற்போது என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.7 ஆவணம் எனது முகவரிக்கு வந்ததா என்றால் வந்தது. அதில் Door Locked Intimation, Intimation என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சமயத்தில் நான் அந்த முவகவரியில் இல்லை. நான் அந்த முகவரியில் வேலை பார்க்கவும் இல்லை. ராதாகிருஷ்ணன் தெரு, அம்மாபாளையம் என்ற முகவரி எனது வீட்டு முகவரியா என்றால் இல்லை. நிறுவன முகவரி ஆகும். பொய்யாக புகார் தாக்கல் செய்துள்ளார் என்று புகார்தாரர் மீது காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்று நீதிமன்றத்தின் மூலம் புகார்தாரர் மீது நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். உண்மையில் புகார்தாரரிடமிருந்து கடன் பெற்றுக்கொண்டு வழக்கு காசோலையை கொடுத்து விட்டு ஏமாற்றி இருக்கிறேன் என்றாலும், அதனால் தான் நான் எந்தவிதமான உரிய சட்டப்படியான நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

7. நான், எனது அண்ணன் மற்றும் இரண்டு நபர்கள் சேர்ந்து சக்திவேல் என்ற நபரை ஏமாற்றிவிட்டதாக CCB காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து தற்போது நீதித்துறை நீதிமன்றம் 3 ல் CC.No.984/2017 என்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டு

நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அது பொய்யான வழக்கு ஆகும். எனது அண்ணன் வழக்கறிஞர் அறிவிப்பு வந்ததிலிருந்து மனஉலைச்சலில் உள்ளதற்கு காவல் நிலையத்தில் புகார்தாரர் மீது புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் எனது அண்ணன் இறந்ததிலிருந்து நானும் பயங்கரமாக 3 மாதங்களாக மன உலைச்சலில் இருந்தேன். அதன்பின்பு நீதிமன்றத்திற்கு செல்லவேண்டாம் என்று முடித்து எடுத்துவிட்டேன். நான் இதுவரை எந்தவிதமான புகாரும் தாக்கல் செய்யவில்லை. எனது அண்ணன் வாங்கிய பணத்தை புகார்தாரருக்கு கொடுக்கமுடியவில்லை என்ற ஏக்கத்தில் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. அவர் பணம் வாங்கவே இல்லை. புகார் தாக்கல் செய்ததால் மனஉலைச்சலில் இறந்துவிட்டார்.

8. புகார்தாரருக்கு கொடுக்கவேண்டிய சட்டப்படியான கடனிற்கு நிறுவனத்தின் Letter Pad மற்றும் வழக்கு காசோலையில் கையொப்பம் செய்து புகார்தாரரிடம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. பதில் அறிவிப்பானது நான், எனது அண்ணன், எனது நிறுவனம் ஆகியோர்கள் சார்பில் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். எனது அண்ணன் இறந்த பின்பு வழங்கு சம்மந்தமாக எந்த மாற்றமும் செய்யவில்லை என்றாலும், பழைய நிலையில் தொடப்படுகிறது என்றாலும், நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. புகார்தாரரை ஏமாற்றவேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA

Digitally signed by K CHITHRA
Date: 2024.08.29 20:00:48 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.